# பேச்சும் தலைமைத்துவமும்

ஏ. பி. எம். இத்ரீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
16 NOV 2012
Library

# பேச்சும்
# தலைமைத்துவமும்

P 0838

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சில் பயிற்சி பெறுவது குறிப்பாகவும் தலைமைத்துவப் பயிற்சி பற்றி பொதுவாகவும் இந்நூல் விளக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சும்
# தலைமைத்துவமும்

ஏ.பி.எம். இத்ரீஸ்

University of Peradeniya
16 NOV 2012
Library

உயிர்ப்பைத் தேடும் வேர்கள்

P0838

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேச்சும் தலைமைத்துவமும்**
ஏ.பி.எம். இத்ரீஸ்

ஆற்றல் மேம்பாட்டு நூல் வரிசை

முதற்பதிப்பு: செப்டம்பர் 2007
வெளியீட்டு எண் : 10

வெளியீடு
**உயிர்ப்பைத்தேடும் வேர்கள்**
மஹ்மூத் ஆலிம் வீதி,
வாழைச்சேனை - 05
தொலைபேசி: 0094 777 141649
மின்னஞ்சல்: abmimthath@yahoo.com
பதிப்புரிமை: ஆசிரியர்
வடிவமைப்பு: உயிர்ப்பைத் தேடும் வேர்கள்
ஓவியம்: எம். மனாஸ்
முன் அட்டை ஓவியம்: பீரிஸ்
அச்சாக்கம்: AJ Prints (Pvt) Ltd., Dehiwala
ISBN 955-99649-4-1

விலை ரூ. 60/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சும் தலைமைத்துவமும் வாழ்க்கையில் முன்னேற விரும்புகிறவர்களிடம் இருக்க வேண்டிய முக்கிய இரண்டு திறமைகளாகும். ஓர் இஸ்லாமிய ஊழியனைப் பொறுத்த மட்டில் அவனது பணியில் இவை பெரும் அணிகலன்களாக அமைகின்றன. ஆதலால் பேச்சும் தலைமைத்துவமும் போன்றவற்றில் நாம் பயிற்சி பெறுவது ஓர் இபாதத் ஆக அமைகின்றது.

இந்தப் பயிற்சியின் நோக்கம் நாம் பெரும் பேச்சாளர்களாக புகழ் அடைவதோ மாறுவதோ அல்ல. மாறாக எங்களுடைய சிந்தனையிலும் பேச்சிலும் திறமையையும் துணிவையும் வளர்த்துக் கொள்வதாகும்.

இதன் மூலம் நாம் எம்மிடத்தில் மறைந்துள்ள தாழ்வு மனப் பான்மையைப் போக்கி தெளிவாக சிந்தித்து செயல்படப் பழகிக் கொள்கிறோம்.

பேச்சு என்பது சாதாரண அறிவுள்ள எந்தவொரு மனிதனாலும் வளர்த்துக் கொள்ளக் கூடிய ஒரு கலையாகும். ஆனால் தெளிவாகவும் மற்றவர்களின் சிந்தனையில் தாக்கத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் விதத்தில் அமைவதே உண்மையான பேச்சாகும். இந்தப் பேச்சுப் பயிற்சியில் ஈடுபடுவதன் மூலமாக நாம் தர்க்க ரீதியாக சிந்திக்கவும் நண்பர்களை உருவாக்கவும் பழகிக் கொள்ளலாம். இது தலைமைத்துவத்திற்கான தகுதிகளையும் எங்களிடம் ஏற்படுத்துகின்றது. வியாபாரம் தொழில் துறை போன்றவற்றிலும் எமது திறமையை வளர்க்கின்றது.

எமது வாழ்க்கையில் பல பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைவது பணமன்று. அனேக பிரச்சினைகளுக்கு முக்கிய காரணங்களாக அமைவது தெளிவற்ற செய்திப்பின்னணிகளும் பேச்சுக்களுமேயாகும்.

ஆதலால் இந்தப் பயிற்சியின் மூலம் நாம் எம்மிடம் மறைந்துள்ள குறைகளை அகற்றி எங்கள் கொள்கையின் பால் மற்றவர்களை ஈர்க்கலாம். அல்லாஹ்வின் பணியில் ஈடுபட்டுள்ள எங்களுக்கு இப்பயிற்சி அணிகலனாக அமைய எல்லாம் வல்ல அல்லாஹ் அருள்புரிவானாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ■ எங்கள் எதிரியை வெற்றி கொள்வது எப்படி?





அ) ஒருபேச்சாளனின் முதலாவது எதிரி பயம்.
இது அவனின் ஆளுமைகளை முடமாக்கி விடுகின்றது! அவனுடைய கருத்துக்களை சிதறடித்து எதிரிகளை உருவாக்கி விடுகின்றது. இதன் விளைவாக அவனுடைய பேச்சு சிறந்த பேச்சாக அமைவதில்லை.

ஆ) உங்களுடைய பயத்திலிருந்து தெளிவு பெறுவதற்கு முக்கியமான அம்சம் நீங்கள் பேசும் விடயத்தில் உங்களுக்குப் பூரண விளக்கம் இருக்க வேண்டும்.

இ) உங்களுடைய பேச்சுக்களை ஒரு நிலைக்கண்ணாடியின் முன் ஒத்திகை பார்த்துக் கொள்ள வேண்டும் அல்லது நடித்துப் பார்க்கலாம்.

ஈ) உங்களுடைய சொந்தக் குரலுக்கே உங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

உ) துணிவான, தன்னம்பிக்கையுள்ள ஒரு மனோபாவத்தை (Attitute) ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

ஊ) பௌதீக உடலமைப்பை மாற்றுங்கள். பயந்த சுபாவத்தை இல்லாதொழிக்க நெஞ்சை நிமிர்த்தி கைகளை முன்னால் வீசி வேகமாக நடந்து பாருங்கள். பயம் பறந்தோடி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அ) சபைக் கூச்சம் எல்லோருக்குமிருக்கின்றது. அதனால் எவ்வளவு ஆயத்தமாக இருந்தாலும் பேசவருவதில்லை. உதாரணமாக பேச்சாளர் திணறல், பேச்சாளர் ஓடிவிடல்.

ஆ) இக் கூச்சம் பெரிய பேச்சாளரிடமும் இருக்கும். ஆனால் பேச ஆரம்பித்துவிட்டால் மறைந்துவிடும்.

இ) அதிகமான மக்கள் கூட்டத்தில்தான் சிலருக்குப் பேச முடியும். சிறிய கூட்டத்தில் பேசமாட்டார்கள். சிலருக்கோ கூட்டத்தைக் கண்டால் கொலை நடுக்கம் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ■ இவற்றிலிருந்து மீட்சி பெறல்



அ) நம்மில் அதிகமானவர்கள் சுய சந்தேகங்களால் (Self doubt) தொல்லைப்படுகின்றனர்.

ஆ) நாம் பல சந்தர்ப்பங்களில் எம்மையே தாழ்த்திக் கொள்கின்றோம். உதாரணமாக, என்னால் இந்தக் காரியத்தைச் செய்ய இயலாது. இந்த வேலை செய்வதில் எனக்குத் திறனில்லை. இவை பாதகமான மனப்பேக்குகளாகும். நீங்கள் எதனை நம்புகிறீர்களோ அதுவே உங்களுடையது.

இ) எங்கள் திறமைகளை நம்புவதுடன் அவை நோக்கத்திற்காக வழங்கப்பட்ட திறமைகள் என்று உறுதி கொள்ள வேண்டும்.

ஈ) திறமையான பேச்சாற்றலை வளர்ப்பதற்கு சபைக் கூச்சத்தையும் தாழ்வு மனப்பான்மையையும் அகற்ற வேண்டும்.

அதற்கு மேற்சொன்ன அறிவுரைகளை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதுடன் விசேடமாக பேச்சுத் துறையில் பயன்படுத்த வேண்டும். அத்தோடு பேச்சுப் பயிற்சி பெற வேண்டுமென்ற உறுதியான தணியாத ஆசை ஏற்பட வேண்டும். அது உங்களுக்குப் பேச்சுத் துறையில் வெற்றியை ஏற்படுத்தும்.

1. வெற்றிக்குத் தேவையான தூண்டல் அல்லது உந்தல்: அது அந்த வெற்றியில் ஆசையின்றி வருவதில்லை.

2. வெற்றிக்குத் தேவையான தகைமைகள் இன்றேல் அதனை நிறுத்திவிடக்கூடாது. கிடைக்கும் ஓய்வு நேரத்தை உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்குப் பயன்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அல்லாஹ் உங்களைப் பிரதிநிதியாக உலகுக்கு அனுப்பியிருக்கின்றான். பேச்சாற்றல் இருந்தால்தான் அவனது தூதை உலகுக்கு உணர்த்த முடியும்.

4. மனிதர்களின் தலைவரும் தலைமைப்பீடமும் நீங்களே. பேச்சாற்றல் இருந்தால்தான் இஸ்லாமிய சட்டத்தை மக்களுக்கு எடுத்துரைத்து அதன் வழியில் நடாத்தலாம்.

5. பொருளாதாரத் துறையில், சமூக ரீதியில், செல்வாக்கில் எல்லாம் பேச்சாற்றல் இருந்தால்தான் முன்னேற முடியும் என்பதைச் சிந்தியுங்கள்.

6. எப்போதும் பேசுவதற்கு முன்பே பேச்சைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

7. நாங்கள் மற்றவர்களுக்கு எவ்வளவு கொடுக்கின்றோமோ அந்த அளவுக்கு எங்கள் வாழ்வு மலரும். மற்றவர்மேல் அன்பும் பரிவும் காட்டுவது எங்களால் இயலாத ஒன்றல்ல. இதனை மனதிற்கொண்டு நீங்கள், வழிதவறும் சமுதாயத்துக்கு வாரி வாரி வழங்கி வழிகாட்டுங்கள்.

8. தோல்வியை எண்ணி மனம் நோகாதீர்கள். ஆக்கபூர்வமான மனப்பான்மையை ஏற்படுத்தி ஒவ்வொரு புதிய பணியையும் வாழ்க்கையின் போராட்டமாகவும், சவாலாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள்.

9. எப்பொழுதும் தாழ்வு மனப்பான்மைக்கோ கூச்சத்துக்கோ மனதில் இடம் கொடுக்காதீர்கள். எவ்வளவு விரைவாக செயற்பட முடியுமோ அவ்வளவு விரைவாகச் செயல்படுங்கள். செயலுக்கு இடம் கொடாத மனதில் தாழ்வுச் சிக்கல், பயம் ஆட்சி புரியும்.

10. பேசப் போகும் விடயத்துக்கு மனதைத் திருப்பி செயல்படுத்துங்கள்.

'மனித வரலாற்றின் மாபெரும் திருப்பங்களுக்கு சிறந்த பேச்சுக்களே பின்னணியாகத் திகழ்ந்திருக்கின்றது.' -Daurd Coplenese





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ■ ஆயத்தம் செய்தால் தன்னம்பிக்கை உண்டாகும்

அ) அதிகமான பேச்சுக்கள் உயிரற்றுப் போவதற்கு முக்கியமான காரணம் அதன் கருத்துக்களும் மொழி அமைப்பும் பேச்சாளர்களுக்கு சொந்தமானதல்ல. பதிலாக அவை இரவல் வாங்கப்பட்டவைகளாகும்.

ஆ) ஆயத்தம் செய்தல் என்பது கொப்பியடிப்பது அல்ல. வாசிப்பதும் அல்ல. புத்தகங்கள், கட்டுரைகளை அப்படியே சமர்ப்பிப்பதும் அல்ல. உங்களுடைய பேச்சில் நிலைத்திருந்து அதை அனுபவ ரீதியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஒரு பேச்சை அரை மணித்தியாலத்திற்கு சமைக்க முடியாது. பேசுவதற்குப் பேச்சு வர வேண்டும். நேர காலத்தோடு தலைப்பைத் தேர்ந்தெடுத்து ஓய்வு நேரங்களிலும் வேலை செய்யும் நேரங்களிலும் அதைப்பற்றி சிந்தியுங்கள். படுக்கைக்குச் செல்லும் போது, சிந்தித்துக் கொண்டே படுங்கள். நண்பர்களோடு கலந்துரையாடுங்கள். அதைப்பற்றிக் கேள்வி கேளுங்கள். கிடைக்கும் எல்லாத் தகவல்களையும் எழுதிவையுங்கள்.

இ) இப்படி சுயமுயற்சியிலீடுபட்ட பின்னர் வாசிக சாலைக்குச் சென்று புத்தகம் படியுங்கள். பேசப் போகும் விடயத்தை தெளிவாக விளங்குங்கள்: அதற்கு ஆதாரமாகத்தான் மற்றவர்களின் ஆக்கங்களைக் குறிப்பிடவேண்டும்.

ஈ) தேவைக்கு அதிகமாக தகவல்களைச் சேகரியுங்கள். நூறு சேகரித்து தொண்ணூறை விட்டு விடுங்கள்.

உ) ஏற்புச் சக்தி (Reseapoues) நீங்கள் பிரயோகிப்பதை விட அதிகமான தகவல்கள் உங்களிடம் இருப்பது அவசியம்.

ஊ) பேச்சைத் தயாரிக்கும் முன் சபையோர்களைப் பற்றி அறிந்து வைத்திருப்பது மிகவும் பிரயோசனமளிக்கும்.

எ) உங்கள் பேச்சை இலகுவானதாகவும் இலக்கிய நயத்துடனும் அமைத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக கதைகள், ஹாஷ்யப் பாணிகள் போன்றவற்றைப் பாவித்து உங்கள் பேச்சை வளப்படுத்திக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேச்சுப் பகுதிகளைப் பொதுவாக மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அ) அறிமுகம்: இதில் பேச்சாளன் சபையோரின் ஆர்வத்தையும் கவனத்தையும் ஈர்க்க வேண்டும்.

ஆ) கலந்துரையாடல் அல்லது நடுப்பகுதி: இதில் பேச்சாளன் தனது முக்கிய கருத்துக்களை எடுத்துரைப்பார்.

இ) முடிவுரை : இதில் பேச்சாளன் தனது முக்கிய கருத்துக்களைச் சொல்வதுடன் அவசியப்படின் செயல்பட அழைப்பு விடுப்பார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ■ மாதிரிச் சட்டங்கள்



அ) i தகவல்களைக் கூறுதல்
ii அவற்றின் அடிப்படையில் வாதிடல்
iii செயல்பட வேண்டுதல்.

ஆ) i பிழையான ஒன்றைச் சொல்வது
ii எப்படித் திருத்துவது எனக் காட்டல்
iii ஒத்துழைக்க அழைத்தல்

இ) i இந்நிலைமையை மாற்ற வேண்டும்
ii அது இப்படி செயல்பட வேண்டும்
iii நீங்கள் ஒத்துழைக்க வேண்டியதன் காரணம்

ஈ) i பேசும் விடயத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தல்
ii சபையோரின் நம்பிக்கையைப் பெறுதல்
iii உங்கள் விசயத்தின் நன்மையைப் பற்றி மக்களுக்கு அறிவித்தல்
iv மக்களை வேலை செய்யத் தூண்டும் இயல்பூக்கங்களைத் தூண்டி விடுதல்.

உ) முகவுரையையும் முடிவுரையையும் சரியாகத் தீர்மானித்துக் கொள்ளல்.


ஊ) கூடியவரை குறிப்புக்களைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

எ) பேச்சை ஆயத்தப்படுத்திய பின் தெருவில் நடக்கும் போதும் பிரயாணம் செய்யும் போதும், படுக்கும் போதும் மனதிற்குள் பேசிப்பாருங்கள். தனிமை கிடைக்குமாயின் முழுமையாகப் பேசிப்பாருங்கள்.

'யுத்தக் கலை என்பது ஒரு விஞ்ஞானம், அதில் சிந்தித்து திட்டமிடப்படாத எதுவுமே வெற்றியடைவதில்லை.' - நெப்போலியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஞாபக சக்தியை வளர்த்துக் கொள்வது எப்படி?

இயற்கையாகக் கிடைக்கும் ஞாபகத்துக்கான திறமையில் 10% க்கும் அதிகமாக ஒரு சராசரி மனிதன் பாவிப்பதில்லை. ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கான இயற்கையான சட்டங்களை மீறுவதன் காரணமாக 90% சக்தியை வீணடிக்கின்றான்.

University of Peradeniya
16 NOV 2012
Library

அ) ஞாபகப் படுத்துவதற்கான இயற்கைச் சட்டங்கள்

i பதித்தல் (Impression)

ii மீட்டல் (Repetetion)

iii தொடர்புபடுத்தல் (Associate)

ஆ) பதித்தல்

i மனதை ஒரு முகப்படுத்தல் (Conson)

ii நெருங்கி அவதானித்தல்

iii எல்லாப் புலன்களையும் ஒரு விடயத்துக்காக உபயோகித்தல்.

iv கண்களை எப்போதும் உபயோகித்தல் அதாவது காதிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்புகளை விட கண்ணிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்புகள் 25% பங்கு மேலதிகமானது.

இ) மீட்டல் (Reptetion)

i ஒரே மூச்சில் பாடமிட முயலாமல் இடையிடையே விட்டு வாசியுங்கள்.

ii பேச ஐந்து நிமிடங்களுக்கு முன் உங்கள் குறிப்புகளை வாசியுங்கள்.

iii பாடமிடும் விடயத்தை முடிந்தால் சப்தமிட்டு பாடமிடுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஈ) தொடர்புபடுத்தல் (Associate)

i ஒரு விடயத்தை உங்களுக்கு ஏற்கனவே தெரிந்தவற்றோடு சேர்த்துப்பாருங்கள்.

ii அப்படித் தொடர்புபடுத்தும் போது பல கேள்விகளையும் கேட்டுப்பாருங்கள். உதாரணமாக யார், என்ன, எங்கே, எப்போது, எப்படி அல்லது பொருத்தமான நிலைக்கேற்ப.

iii புதியவர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டால் அவரின் பெயரோடு முகத்தையும் தொழிலோடு பெயரையும் தொடர்புபடுத்த முயலுங்கள். அல்லது அவருடைய தொழிலையும் வசிப்பிடத்தையும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

iv ஆண்டுகளை, உங்கள் மனதில் பதிந்த ஆண்டுகளோடு தொடர்புபடுத்துங்கள்.

v பேச்சுக் குறிப்புகளை தர்க்கரீதியாக ஒழுங்குபடுத்துங்கள். ஒரு குறிப்பு இன்னொன்றுக்கு இட்டுச் செல்ல வேண்டும். உள்ளத்தில் உருவகப்படுத்துங்கள். அவ்விடயத்தில் லயித்திருங்கள். தெளிவான பதிப்புகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

உ) மேற்சொன்ன வழிகள் எல்லாம் கைகொடுக்காமல் எல்லாவற்றையும் மறந்துவிட்டால் உங்கள் பேச்சின் கடைசிச் சொல்லை அடுத்த வசனத்தின் முதற்சொல்லாக்கிப் பேசிக்கொண்டு செல்லுங்கள். இப்படிச் செய்யும் போது குறிப்புக்கள் ஞாபகத்துக்கு வந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ) நாம் ஒன்றில் படிப்படியாக முன்னேறுவதில்லை. திடீர் திடீரென முன்னேறுகின்றோம். இடையில் மாற்றங்கள் காணப்படும்.

ஆ) பேச ஆரம்பிக்கு முன்னர் எப்போதும் மனப்பதட்டம் காணப்படும். பேசி முடியும் வரை இருக்கும் அப்பதற்றத்தை மாற்றலாம். ஆனால் பேச ஆரம்பித்த சில நிமிடங்கள் வரை இருக்கும் பதற்றத்தை அகற்ற முடியாது.


இ) பேச்சுத் துறையில் வெற்றியீட்டியவர்கள் யாரும் விசேட திறமைகளோடு பிறந்தவர்கள் அல்ல. ஆனால் அவர்களிடம் உறுதியான திடசங்கற்பமும் விடாமுயற்சியும் இருந்ததால் முன்னேறி இருக்கிறார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ■ சிறந்த முறையில் முன்வைப்பதன் இரகசியம்





அ) பேச்சு உள்ளத்திலிருந்து வெளிப்பட வேண்டும்.

ஆ) பேச்சாளருக்கும் கேட்போருக்கும் இடையில் பேச்சு ஒருபாலம் என்பதை மனதில் இருத்திப் பேச வேண்டும்.

இ) உங்களிடத்தில் இயற்கையாகவே ஹாஷ்யப் பாணி அமைந்திருந்தால் அதனைப் பயன்படுத்துங்கள்.

ஈ) நீங்கள் எப்பொழுதும் சபையோரிடம் மன்னிப்புக்கேட்கும் தன்மையில் உங்கள் பேச்சை நடத்தாதீர்கள். உதாரணமாக நான் ஒரு பெரிய பேச்சாளனல்ல. இந்த விடயத்தில் எனக்குப்பூரண அறிவில்லை. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

உ) உங்களைப் பற்றிய வெளிப்பகட்டான பேச்சுக்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

ஊ) எப்பொழுதும் உங்களால் இயலாத காரியங்களை அல்லது மக்கள் விரும்புவார்கள் என்பதற்காகச் சொல்லாதீர்கள்.


எ) உங்கள் தலையங்கத்தை சபையோருக்கு ஏற்றதாக அமைத்துக் கொள்ளுங்கள்.

ஏ) புதியதொரு விடயத்தில் நீங்கள் பேசுவதாக இருந்தால் ஏற்கனவே சபையோருக்கு அறிமுகமான விடயத்துடன் ஒப்பிட்டுப் பேசுங்கள்.

ஒ) ஒரு விடயத்தில் அதிகமான விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டு செல்லாமல் சபையோருக்குப் பொருத்தமான அனுபவங்களைக் கூறி விளக்குங்கள். தெரியாத விடயத்தில் பேசச் செல்லாதீர்கள். அவர்கள் கேட்ட கேள்வியொன்றுக்கு நீங்கள் விடைசொல்வது போல் நினைத்துப் பேசுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அ) உங்கள் பேச்சில் முக்கிய சொல்லை அழுத்துங்கள்

ஆ) குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் பேசுங்கள்.

இ) உங்கள் வேகத்தைக் கூட்டியும் குறைத்தும் பேசுங்கள். முக்கியமான கருத்தை வெளியிட முன்னரும் பின்னரும் சற்று தாமதியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ நாம் மேடையில் பிரசன்னமாவது எப்படி?



அ) களைப்படைந்திருக்கும் போது பேச வேண்டாம். இளைப்பாறி போதியளவு சக்தியைப் பெற்றுக்கொண்ட பிறகே பேச வேண்டும்.

ஆ) பேச முன் கொஞ்சமாகச் சாப்பிடுங்கள்.

இ) சக்தியை வீணாக்கும் எதனையும் பேசமுன் செய்ய வேண்டாம்.

ஈ) ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் உடையை அணிந்து கொள்ளுங்கள். அது சுயமரியாதையும் தன்னம்பிக்கையும் தரும்.

உ) புன்சிரிப்போடு பேசச் செல்லுங்கள்

ஊ) சபையோரை நெருங்கி உட்கார வையுங்கள்.

எ) குறைந்த எண்ணிக்கை கொண்ட கூட்டமென்றால் சிறிய அறையில் உட்கார வையுங்கள். கலந்துரையாடுங்கள் அதுவே நல்லமுறையாகும்.

ஐ) உங்கள் முழு உருவமும் தெரியக்கூடியதாக நில்லுங்கள்.

ஒ) கூடியவரையில் மேடையில் அதிதிகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



University of Peradeniya
16 NOV 2012
Library

அ) நபி (ஸல்) அவர்கள் பேச்சை ஆரம்பிப்பது போன்று ஹம்து ஸலவாத்துச் சொல்லி ஆரம்பியுங்கள்.
ஆ) ஆரம்பத்தில் சொல்லவேண்டிய வார்த்தைகளை முன்கூட்டியே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.
இ) முகவுரை சுருக்கமாக அமையவேண்டும்.
ஈ) ஜோக்கான கதையைச் சொல்லி ஆரம்பிப்பதோ அல்லது மன்னிப்புக் கேட்டு ஆரம்பிப்பதோ பயிற்சி பெறும் பேச்சாளருக்கு வெற்றியைத் தராது. அவற்றைச் சொல்வதாக இருந்தால் பொருத்தமாக இருக்க வேண்டும்.
உ) முன்பு பேசிய பேச்சாளரின் பேச்சிலிருந்து முக்கிய அம்சங்களை மேற்கோள் காட்டிப் பேசலாம்.
ஊ) உங்களுடைய பேச்சின் முக்கிய அம்சங்களை தலைப்புச் செய்திகள் போல கூறி பேச்சை ஆரம்பிக்கலாம்.
எ) சபையோரின் உடனடிக்கவனத்தை ஈர்க்க,

1. வினோதத்தை ஏற்படுத்தலாம்.
2. அன்றாட வாழ்க்கையோடு தொடர்பான கதையைச் சொல்லலாம்.
3. காட்சிப் பொருட்களைக் காட்டலாம்.
4. கேள்வி கேட்பதன் மூலம் தொடங்கலாம்.

ஏ) பேசப்படும் விடயம் அவர்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கக் கூடியது என்று கூறி ஆரம்பிக்கலாம்.
ஐ) அதிர்ச்சி தரும் உண்மையைச் சொல்வதன் மூலம் தொடங்கலாம்.
ஒ) அண்மையில் நடந்த சம்பவத்தை வைத்து ஆரம்பிக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ■ பேச்சை முடிப்பது எப்படி?

University of Peradeniya
16 NOV 2012
Library





அ) இறுதியாகச் செல்லிவைப்பது நீண்டகாலம் நினைவு கூறப்படலாம்.
ஆ) முடிப்பதாகச் சொல்லாமல் முடியுங்கள்.
இ) எப்படி முடிப்பது என்பதை நேரகாலத்தோடு திட்டமிடுங்கள்.
ஈ) முடிக்கும் முறைகள்

1. சுருக்கத்தைச் சொல்லல்.
2. பணி புரிய அழைத்தல்.
3. சபையோருக்குப் பொருத்தமான புகழ்ச்சியைச் சொல்லல்.
4. சிரிப்பை ஏற்படுத்துதல்.
5. பொருத்தமான கவிதையைக் கூறல்.
6. குர்ஆன், ஹதீஸ் வசனங்களைக் கூறல்.
7. உணர்ச்சியின் உச்சகட்டத்திற்கு அழைத்துச் செல்லல்.
8. சபையோர் இருக்கச் சொல்லும் முன் முடித்துக் கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ) தெரியாத விடயத்தைத் தெரிந்தவற்றைச் சொல்வதன் மூலம் தெரியப்படுத்தலாம். உதாரணம்: ஒரு கிராமத்தைத் தெளிவுபடுத்த மற்றொரு கிராமத்தோடு ஒப்பிடலாம்.

ஆ) சாதாரண மக்களுக்கு உரை நிகழ்த்தும் போது கலைச்சொற்களைப் பாவிக்கக்கூடாது.

இ) நீங்கள் பேச நினைத்தது உங்களுக்கே தெளிவாக விளங்கியிருக்கிறதா என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஈ) கூடியவரை மின்னியல் உபகரணங்களைப் பாவியுங்கள்.

உ) முக்கியமான கருத்தைத் திருப்பிச் சொல்லுங்கள். இதற்கு வேறுவார்த்தைகளைப் பயன்படுத்துங்கள்.

ஊ) தொட்டுணர முடியாத உண்மைகளை உணர்த்த தகுந்த உணர்ச்சிகளால் தெளிவு படுத்துங்கள்.


எ) சிறிய சொற்பொழிவுகளில் அதிகமான குறிப்புக்களை விளங்கப்படுத்த வேண்டாம். குறிப்புக்களின் சாரம்சத்தைச் சொல்லி முடியுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ■ சபையோரிடம் சுவாரஷ்யத்தை ஏற்படுத்துவது எப்படி?



அ) நாம் சாதாரண விடயம் பற்றி அசாதாரண செய்திகளில் சுவாரஷ்யம் அடைகிறோம்.

ஆ) நாம் நம்மைப் பற்றியே சிரத்தை எடுக்கிறோம்.

இ) மற்றவர்கள் தம்மைப்பற்றி பேசவிட்டு நாம் ஓரிரு கருத்துக்களை மட்டும் சொன்னால் சபையோரின் கவனத்தை ஈர்க்கலாம். நமது கருத்து அவர்களின் மனதில் பதியும்.

ஈ) வதந்திகள், மக்களைப் பற்றிய செய்திகள் எப்போதும் கவனத்தை ஈர்க்கும். பேச்சாளர் இக்கதைகளோடு தொடர்புபடுத்தி ஒரு சில கதைகளை மட்டும் சொன்னால் போதும்.

உ) திட்டவட்டமான புலனுணர்வுக்குட்பட்ட உண்மைகளைச் சொல்லுங்கள்.

ஊ) கண்களுக்கு முன்னால் படம்பிடித்துக் காட்டுவது போன்ற சொற்களை, தொடர்களைப் பாவியுங்கள்.

எ) முடியுமாக இருந்தால் ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தியும் ஒன்றுக்கொன்று எதிரான வசனங்களிலும் கருத்துக்களை வெளியிடுங்கள்.

ஏ) பேச்சாளர் தாம்பட்ட அவதிகளை சொல்வதனாலும் சுவாரஷ்யம் ஏற்படும்.

P 0838



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொற்களஞ்சியத்தை வளர்த்துக் கொள்வது எப்படி?

அ) நம்மை மற்றவர்கள் மதிப்பிட நான்கு விடயங்கள் காரணமாக இருக்கின்றன.

1. நாம் என்ன சொல்கிறோம்.
2. நாம் எப்படித் தோற்றமளிக்கிறோம்.
3. நாம் என்ன செய்கிறோம்.
4. எப்படிச் சொல்கிறோம்.

ஆ) உங்கள் சொல்வண்மை நீங்கள் யாருடன் பழகுகிறீர்கள் என்பதைப் பிரதிபலிக்கும். ஆகையால் உங்கள் நேரத்தில் கூடிய பகுதியை நல்ல சொல்லாற்றல் உள்ளவர்களோடு, புத்தகங்களோடு கழிக்க முயலுங்கள்.

இ) செய்திப் பத்திரிகைகளைப் பார்க்கும் நேரத்தைச் சுருக்கி நல்ல இலக்கிய நூல்களைப் படியுங்கள்.

ஈ) வாசிக்கும் போது எப்போதும் அகராதி ஒன்றை வைத்துக் கொண்டே வாசியுங்கள்.

உ) சொல்லின் சரித்திரத்தைப் படித்துவைத்திருப்பது சுவாரஷ்யமாகும்.

ஊ) ஒரே வார்த்தையைத் திருப்பித் திருப்பிப் பாவிக்காமல் அதே கருத்துள்ள வேறு சொற்களைப் பாவியுங்கள்.

எ) பழசுபட்டுப் போன உவமைச் சொற்களைப் பாவிக்காமல் புதுவகையான உவமைகளைப் பாவியுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிற வெளியீடுகள்

1. முக்காடு (சிறுகதைத் தொகுப்பு)
வை. அஹமத்
*1999*

2. தரிசனம் - நிலவின் நிழலில் (குறு நாவல்கள்)
வை. அஹமத்
*1999*

3. நவீனத்துவத்தின் தோல்வி (கட்டுரைகள்)
றவூப் ஸெய்ன்
*2002*

4. சீறாவின் இயங்கியல் (ஆய்வு)
ஏ.பி.எம். இத்ரீஸ்
*2005*

5. இஸ்லாத்தில் சிறுவர் உளவியல் (உளவியல்)
ஏ.பி.எம். இத்ரீஸ்
*2005*

6. அதிகாரம் பற்றிய இரண்டு கண்ணோட்டங்கள் (கட்டுரைகள்)
ஏ.பி.எம். இத்ரீஸ்
*2007*

7. உரையாடல் தொடர்கிறது (நேர்காணல்)
ஸைனப் அல் கஸ்ஸாலி
*2006*

8. அபாயகரமான வார்த்தை (உளவியல்)
ஏ.பி.எம். இத்ரீஸ்
*2007*

9. சிந்தனைகள் எவ்வாறு பிறக்கின்றன (ஆற்றல் மேம்பாட்டு நூல் வரிசை)
ஏ.பி.எம். இத்ரீஸ், கலாநிதி நஜீப் அர்ரபாஈ
*2007*

10. பேச்சும் தலைமைத்துவமும (ஆற்றல் மேம்பாட்டு நூல் வரிசை)
ஏ.பி.எம். இத்ரீஸ்
*2007*

P 0838

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
16 NOV 2012
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் மனிதனுக்குத் தெளிவாகப் பேசக் கற்றுக் கொடுத்தான். மனிதனை ஏனைய உயிரினங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது பேச்சாற்றலே.

ஒருவரின் பேச்சிலிருந்து அவரது சமூகம், பண்பாடு போன்றவற்றை அளவிடமுடியும். இறைவன் வழங்கிய இவ்வரிய ஆற்றலை எவ்வாறு மேம்படுத்துவது என்பதை ஓவியங்களுடன் இந்நூல் விளக்குகின்றது.

ஆற்றல் மேம்பாட்டு நூல் வரிசை

**உயிரப்பைத் தேடும் வேர்கள்**

ISBN 955-99649-4-1

9 789559 964940

விலை 60/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org